முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவுத் திட்டம் விரிவாக்கத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து தஞ்சாவூர் மாநகராட்சி கொள்ளுப்பேட்டை அண்ணா திருமண மண்டபத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் 09.02.2026 அன்று துவக்கி வைத்து தூய்மைப் பணியாளர்களுடன் இணைந்து உணவு அருந்தினார். மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே.ஜி.நீலமேகம் (தஞ்சாவூர்), மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் மரு.அஞ்சுகம்பூபதி , மாநகராட்சி ஆணையர் க.கண்ணன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக பர்கூர் சட்டமன்றத் தொகுதி போச்சம்பள்ளியில் மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற தமிழ்நாடு தலை குனியாது மாபெரும் பரப்புரை பொதுகூட்டத்தில் கழக அயலக அணி தலைவர் கலாநிதி வீராசாமி எம்.பி. சிறப்புரையாற்றினார்.

சுற்றுலாத் துறையில் அதிகரித்து வரும்

விதிமீறல்களைத் தடுக்க, அரசின் முன்முயற்சிகள் ஏதேனும் உள்ளதா?

மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, பிப். 13 - திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் மக்களவையில், சுற்றுலாத்துறை முகமையாளர்களிடம் தொடர்ந்து அதிகரித்து வரும் விதிமீறல்களை அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? என்றும் சுற்றுலா பயனாளிகளின் இன்னல்களை தடுத்திட ஒன்றிய அரசிடம் ஏதேனும் முன்முயற்சிகள் உள்ளதா? என்றும் கடந்த ஐந்தாண்டுகளில் சுற்றுலா முகமை யாளர்களின் மீது எவ்வளவு புகார்கள் பெறப்பட்டுள்ளன? என்றும் முகமையாளர்களின் வீதி மீறல்களை தடு;த்து நிறுத்திட ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதா? என்று சுற்றுலாத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:

அதிகமான கட்டணத்தை பெறுதல், சேவைகளில் குறைபாடு, தவறான தகவல்களை அளித்தல் போன்ற, சுற்றுலா முகமையாளர்களுக்கு எதிரான புகார்கள் அனைத்தும் கணினி மூலம் செயல்படும் குறை தீர்க்கும் இணையதளத்தின் மூலம் நிவர்த்தி செய்ய, உரிய முயற்சிகளை ஒன்றிய அரசு எடுத்துள்ளது என்றும், இணையதளம் மூலம் புகார்கள் பெறபட்டதும் சுற்றுலாத்துறை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட முகமையாளர்களிடமும், மாநில அரசுகளுடன் தொடர்பு கொண்டு குறைகளை தீர்க்க ஆவன செய்துள்ளது என்றும், ஒன்றிய அரசு விருந்தோம்பல் முனைவோர்களுக்கும், சுற்றுலா அமைப்பாளர்கள் மற்றும் போக்குவரத்து ஏற்பாட்டாளர்கள் ஆகியோருக்கான வழிகாட்டு நெறிமுறைகளை சுற்றுலாத் துறை வகுத்துள்ளது என்றும், அனுமதி பெற்ற சுற்றுலா முகமையாளர் களுக்கும் மாநில அரசின் உதவியுடன் அனைத்து வசதிகளும் செய்து தரப்படுகிறது என்று அமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

மேலும், சுற்றுலா பயனாளிகளின் பாதுகாப்பு, மாநில அரசுகளின் வசம் இருப்பதால் தெலுங்கானா, ஆந்திரபிரதேசம், டெல்லி, கோவா, கர்நாடாகா, கேரளா, மகாராட்டிரா, இமாச்சல பிரதேசம், ஜம்மு காஷ்மீர், மத்திய பிரதேசம், ஒடிசா, பஞ்சாப், ராஜஸ்தான், சிக்கிம் மேலும் உத்திரபிரதேசம் ஆகிய 15 மாநிலங்களுடன் இணைந்து சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக் கென சுற்றுலா காவல் துறையை ஏற்படுத்தியுள்ளது என்றும் விருந்தோம்பல் முனைவோர்களின் தேசிய தரவுகள் மையம் ஒன்றும் ஒன்றிய அரசால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது என்று அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் அவர்கள் பதிலளித்தார்.

மொத்த உற்பத்தி பெருக்கம் –

பயனாளிகள் விலைக் குறியீடு நிர்ணயிப்பதில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமா?

மாநிலங்களவையில் எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி, பிப். 13- திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர் திரு. எஸ்.ஆர். சிவலிங்கம் அவர்கள் மாநிலங்களவையில் ஒன்றிய அரசின் புள்ளி விவரங்களான மொத்த உற்பத்தி பெருக்கம், பயனாளிகளின் விலைக் குறியீடு ஆகிய வற்றை நிர்ணயிப்பதில் உரிய சீர்திருத்தங்களை அரசு மேற்கொள்ளுமா? என்றும் சர்வதேச செலாவணி நிதியத்தின் புள்ளி விவரங்கள், அரசின் புள்ளி விவரங்களிலிருந்து மாறுபட்டிருப்பதை அரசு அறியுமா? என்றும் தொழிற்சாலை உற்பத்தி சீர்திருத்தங்களை மேற்கொள்ள அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா? என்றும் சர்வதேசதரத்திற்கு ஏற்ற வகையில் பள்ளியியல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ள இயலுமா? என்றும், புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறை இணையமைச்சர் ராவ் இந்தர்ஜித் சிங் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:-

ஒப்பந்த விதிமுறைகள் 4ன்படி இந்திய செலாவணி நிதியம், இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே, உறுப்பினர் நாடுகளுடன் உறுப்பினர் சந்திப்பு நிகழ்வினை நடத்துகிறது என்றும், உறுப்பினர் நாடுகள் சந்திப்பு கடந்த 2024 வருடம் நடைபெற்றது என்றும், இந்திய செலாவணி நிதியத்தின் அடிப்படை கணக்கீட்டு ஆண்டு 2011-12ல் இருப்பதால் நிதியத்தின் புள்ளி விரங்களுக்கும், இந்திய புள்ளி விவரங்களுக்கும் மாறுபாடு இருப்பது அரசின் கவனத்தில் உள்ளது என்றும், அடிப்படை கணக்கீட்டு ஆண்டினை 2022-23 ஆண்டில் மாற்றியமைப்பதால் புள்ளியியல் சீர்திருத்தத்தை மேற்கொள்ள ஒன்றிய அரசு தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது என்று இணையமைச்சர் மாநிலங்;களவையில் தெரிவித்தார்.

மேலும் நாட்டின் மொத்த பெருக்கம், பயணாளிகள் விலைக் குறியீடு, தொழிற்சாலைகளின் உற்பத்தி குறியீடு ஆகியவற்றை நிர்ணயிப்பதில் உள்ள நடைமுறை சிக்கல்களை தவிர்க்கும் வகையில் தேவையான அனைத்து சீர்திருத்தத் தையும் மேற்கொள்ள ஒன்றிய அரசு உரிய முயற்சிகளை எடுக்கத் திட்டமிடபட்டுள்ளது என்றும், கல்வியாளர்கள். மத்திய மாநில அரசுகள், இந்திய ரிசர்வ் வங்கியாளர் ஆகியோரை உள்ளடக்கிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவினர், புள்ளியல் சீர்திருத்த ங்களை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளனர் என்றும் வருகின்ற பிப்ரவரி மாத இறுதிக்குள் நாட்டின் மொத்த உற்பத்தி பெருக்கம், பயனாளிகள் விலைக் குறியீடு ஆகிய புள்ளி விவரங்கள் வெளியிடப்படும் என்றும், இந்திய செலாவணி நிதியத்தின் பல்வேறு காரணிகளை, இந்திய புள்ளியல் துறை கடைப்பிடித்து வருகிறது என்றும் இணையமைச்சர் ராவ் இந்தர்ஜித் சிங் அவர்கள் பதில் அளித்துள்ளார்.

கரூர் மாவட்டத்தில்

தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவுத் திட்டம்!

சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி துவக்கி வைத்தார்!

கரூர், பிப். 13 – கரூர் மாவட்டத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவுத் திட்டத்தை சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி துவக்கி வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநகராட்சிகள் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தூய்மைப் பணியாளர்களுக்கு காலைஉணவுத் திட்டம் விரிவாக்கத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி கரூர் மாநகராட்சியில் இத்திட்டத்தை தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமை வகித்தார்.

கரூர் மாநகராட்சியில் பணிபுரியும் 1061 தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில் பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கரூர் மாநகராட்சிக்கு உட்பட்ட 48 வார்டுகளிலும், 1061 தூய்மைப் பணியாளர்கள் காலை உணவு திட்டத்தில் பயன்பெறுகிறார்கள். 3 ஆண்டுகளுக்கு இந்த உணவு வழங்கக்கூடிய ஒப்பந்தம் கோரப்பட்டு ரூ.5.32 கோடி மதிப்பீட்டில் இதற்கான ஒப்பந்தம் உறுதி செய்யப்பட்டு உணவு வழங்குவதற்கான வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

1061 பயணிகளுக்கு இரண்டு பை (அதாவது டிபன் பாக்ஸ்) அடங்கிய பை தயார் செய்யப்பட்டு, ஒரு பை அவர்களிடத்திலே வழங்கப்படும். உணவை எடுத்துக்கொண்ட பிறகு அந்தப்பையை திரும்ப ஒப்படைத்து இரண்டாவது பையை அடுத்த நாள் பெற்றுக் கொள்வார்கள்.

இந்தியாவிலேயே ஒரு மாநிலத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கக்கூடிய ஒரு மகத்தான திட்டம் செயல்படுத்தக்கூடிய முதல் மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். துய்மைப்பணியாளர்களுக்குத் தனியாக நல வாரியம் மேலும் அவர்கள் சார்ந்த திட்டங்களைச் செயல்படுத்துவதில் முனைப்புடன் செயல்பட்டு வரும் முதலமைச்சருக்கு நன்றியைச் சொல்ல வேண்டுமென்று தூய்மைப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

கரூர் மாநகராட்சியில் 48 வார்டுகளிலும் தூய்மைப் பணியாளர்கள் தினந்தோறும் அதிகாலை 5:30 மணிக்கே வேலைக்கு வருவதால், அவர்களின் உடல்நலன் கருதி இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

தினந்தோறும் காலை உணவு காலை 9.00 மணி முதல் 9.30 மணி வழங்கப்படும். திங்கட்கிழமை இட்லி மெதுவடைசாம்பார். செவ்வாய் கிழமை ரவா கிச்சடி, தக்காளி சட்னி, புதன் கிழமை வெண்பொங்கல் சாம்பார், வியாழக்கிழமை உப்புமா, கொத்தமல்லி சட்னி, வெள்ளிக் கிழமை இட்லி மெதுவடை சாம்பார். சனிக்கிழமை ரவா பொங்கல் சாம்பார் மற்றும் ஞாயிற்றுக் கிழமை சேமியா கிச்சடி சாம்பார் வழங்கப்படும்.

கரூர் மாவட்டத்தில் மாநகராட்சியில் பணிபுரியும் 1061 பேர். 7 பேரூராட்சிகளில் 301பேர், . பள்ளப்பட்டி நகராட்சியில் 101பேர், புகழூர் நகராட்சியில் 135 பேர், குளித்தலை நகராட்சியில் 121 தூய்மைப் பணியாளர்களுக்கும் என மொத்தம் 1719 தூய்மைப் பணியாளர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் உணவு வழங்கப்படுகிறதென கரூர் சட்டமன்ற உறுப்பினர் செந்தில்பாலாஜி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் வெ.கவிதா, மாநகராட்சி ஆணையர் கே எம்.சுதா, துணை மேயர் ப.சரவணன் மண்டல குழு தலைவர்கள்எஸ்.பி.கனகராஜ், ஆர். எஸ்.ராஜா. சக்திவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற

“வெல்லும்தமிழ்ப்பெண்கள்” ஆலோசனைக்கூட்டம்!

மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்!

கிருஷ்ணகிரி, பிப். 13 - கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வெல்லும் தமிழ் பெண்கள் என்ற தலைப்பில் பெண்களுக்கான ஆலோசனைக் கூட்டம் கிருஷ்ணகிரியில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் கலந்து கொண்டு பெண்களுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

அப்பொழுது பேசிய மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. திராவிட நாயகரின் ஆட்சியில் பெண்களுக்கென்று தனி கவனத்துடன் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்களால் நாம் அடைந்துள்ள முன்னேற்றம் ஒரு தொடக்கம் தான் தமிழக முதல்வர் பெண்களை முன்னிறுத்தி பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் அந்த அடிப்படையில் பள்ளிக் கல்வியில் பெண் குழந்தைகள் 84 சதவீதம் கல்வி பெற்று முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் என்று புள்ளி விவரங்கள் மூலம் தெரியவருகிறது அதேபோல் கல்லூரிக்குச் செல்லும் பெண் பிள்ளைகளின் விகிதம் 70 சதவீதத்தை தாண்டி உள்ளது. அதேபோல் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்ற 80 சதவீதத்திற்கும் அதிகமான பெண்கள் தங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளனர், 500 க்கும் மேற்பட்ட பெண்களை பணியமர்த்தும் புதிய தொழிற்சாலைகளுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு 10% ஊதிய மானியம் வழங்கப்படுகிறது. இந்த திட்டங்கள் அனைத்தும் பெண்களுக்கு சலுகைகள் அல்ல அவை அனைத்தும் அவர்களின் உரிமை, பெண்கள் வெறும் பயணாளிகள் அல்ல அவர்கள் தான் குடும்பத்தின் தூண்கள். பெண்களின் வளர்ச்சிக்கு பாடுபடும் முதல்வரின் 2.0 ஆட்சி அமைய நாம் அணைவரும் பாடுபட வேண்டும். அணைவரும் தங்களது பூத்கள் அதிக வாக்குகள் கிடைக்க முதல் வரின் திட்டங்களை அனைத்தும் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என பேசினார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில மகளிர் ஆணைய உறுப்பினர் மருத்துவர் மாலதி நாராயணசாமி, மாநில வர்த்தக அணி துணை செயலாளர், அன்பரசன் , மாவட்ட துணை செயலாளர் சாவித்திரி கடலரசு மூர்த்தி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் லட்சுமி பிரியா, தொகுதி பொறுப்பாளர்கள் கிருஷ்ணகிரி புஷ்பா , ஊத்தங்கரை சுமித்ரா தவமணி, , நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம் வேலுமணி உள்ளிட்ட நிர்வாகிகள், மகளிர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

என். ஜெயக்குமார்

பிப்ரவரி 13 (2024)

கழகம் துவக்கப்பட்ட போது, தலைமைக் கழக அலுவலகமாக செயல்பட்டு வந்த இராயபுரம், “அறிவகத்தில்” 1970 ஆம் ஆண்டு முதல் பணியாற்ற தொடங்கி, சற்றேறக்குறைய 54 ஆண்டு காலமாக, தலைமைக் கழகத்தில் பணியாற்றியவர்.

கழகத் தலைவர்களான முத்தமிழறிஞர் கலைஞர் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி ஆகிய இருபெரும் தலைவர்களின் அன்பை பெற்றதுடன், அவர்கள் எண்ண ஓட்டமறிந்து, அதனை உடனே செயல்படுத்தி வந்தவர்.

கிளை முதல் மாவட்ட அமைப்பு வரையிலான அனைத்து அமைப்புகளின் பெயர், அதன் நிர்வாகிகள் பெயர் என அனைத்து விவரங்களையும் கணினி போல தன் மனதில் பதிந்து வைத்து, அதனை தலைவர் கேட்கும்போது உடனடியாக சொல்லக் கூடிய ஆற்றல் பெற்றதுடன், மாநிலம் முழுவதுமுள்ள அனைத்து கழக நிர்வாகிகள், முன்னோடிகளின் வரலாற்றை அறிந்து வைத்திருந்தவர்.

கழகத் தலைவர் அவர்கள் “தலைமைக் கழகத்தை நாடி வந்த ஒவ்வொரு உடன்பிறப்பும் அன்போடும் உரிமையோடும் உறவாடி ‘அறிவாலயம் ஜெயக்குமார்’ எனப் பெயரிட்டனர். உடன்பிறப்பு என்ற சொல்லுக்கேற்ப உடன்பிறப்பாய் துணை நின்ற அறிவாலயம் ஜெயக்குமார் அவர்களை வழியனுப்பும் துயர நிலைக்கு இன்று ஆளாகிவிட்ட கொடுமையும் வந்து சேர்ந்துவிட்டது. கலங்கி நிற்கும் உங்கள் அனைவருக்கும் ஆறுதல் சொல்லித் தேற்ற வேண்டிய நிலையில் இருக்கிறேன்.” என தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

நாச்சியார்கோவில் தி. இராமலிங்கம்

பிப்ரவரி 13 (2009)

பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோரின் பேச்சினாலும் – கொள்கையினாலும் ஈர்க்கப்பட்டு, கழகம் துவக்க காலத்திலே உறுப்பினராகி, கழகப் பணியாற்றி வந்த இவர், தொடர்ந்து 48 ஆண்டுகளாக நாச்சியார்கோவில் கிளைக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

மன்னை நாராயணசாமி, கே.கே.நீலமேகம் மற்றும் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டக் கழக முன்னோடிகளுடன் இணைந்து பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் போன்ற கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக,நெருக்கடிகாலத்தில் மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.